DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No. 153/2023**

Deposition of witness for Prosecution அ.சா.1

Name : அம்சத் ராணி
Father/ Husband Name : சக்கரைமிதார்
Village :
Taluk :
Calling :
Age :

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 15.07.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் இளையான்குடியில் குடியிருந்து வருகிறேன். விபத்தில் இறந்து போன ஜாகீர் உசேன் எனது மகன். கடந்த 12.03.2023-ம் தேதி என் மகன் அவருக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் தேவகோட்டைக்கு வரும்போது மாலை 04.00 மணிக்கு ஒத்தக்கடை பாலம் அருகில் தேவகோட்டை நோக்கிவந்த என்மகனை தேவகோட்டையிலிருந்து சென்ற டெம்போ வாகனம் அடித்து விட்டது. அதில் என் மகனுக்கு தலையில் காயம் ஏற்பட்டு காதிலிருந்து இருந்து இரத்தம் வந்தது. நான் தேவகோட்டை அரசு மருத்துவமனைக்கு போய் பார்த்தேன். பிறகு அங்கிருந்து காரைக்குடி அப்போல்லா மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு தீவிர சிகிச்சையில் 2 நாட்கள் இருந்தவர் 3-ம் நாள் இறந்துவிட்டதாக தெரிவித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் நான் சொல்லசொல்ல எழுதியது. அதில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும். அதில் நான் கைரேகை வைத்து கொடுத்தேன். **(மேற்படி புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் முதல் விசாரணையில் சொன்னதை தான் போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். போலீசார் என்னை காவல்

நிலையத்தில் வைத்துதான் விசாரித்தார்கள். புகார் மனுவை நான் எழுதவில்லை அதனால் அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. சம்பவம் பற்றி எனக்கு யார் சொன்னது என்றால் போலீஸ்காரர்கள் சொன்னார்கள்.

2. நான் சம்பவம் பற்றி கேள்விப்பட்டு நேராக மருத்துவமனைக்கு தான் சென்றேன். கணவருடைய இறப்பு நாளான பாத்தியா என்பதை தேவகோட்டையிலுள்ள தங்கச்சி மகள் வீட்டில் தான் அனுசரிப்போம் என்றால் சரிதான். தகவல் தெரிந்து யார், யார் மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் ஜாகீர்உசேன் மற்றும் என் தங்கச்சி மகள் வந்தார்கள். வேறு யார், யார் வந்தார்கள் என்று நினைவில்லை.

3. நான் மருத்துவமனைக்கு சென்ற போது ஜாகீர்உசேன் நல்ல நினைவுடன் தான் இருந்தார். வழக்கின் எதிரியானவர் சட்டத்தையும், சாலைவிதிகளையும் மதிப்பவர் என்றும், எதிரி சாலைஓரமாக தான் வாகனத்தை நிறுத்தி இருந்தார் என்றும் என் மகன் தான் 250சிசி திறன் கொண்ட இருசக்கர வாகனத்தை அதிவேகமாக ஓட்டி வந்து இடித்து இறந்து விட்டார் என்று சொன்னால் சரியல்ல.

4. இழப்பீடு பெற தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஏதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை :**</u> இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்
தேவகோட்டை.